**மோடிக்குத் துணைபோகும் எடப்பாடி பழனிசாமியையும் – விவசாயிகளின் எதிரி மோடியையும்**

# தமிழ்நாட்டு விவசாயிகள் என்றும் மன்னிக்க மாட்டார்கள்!

## அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டியில் கண்டனம்!



**சென்னை, மார்ச் 14-**

**700 விவசாயிகளின் இறப்புக்குக் காரணமாக இருந்துவிட்டு விவசாயம் பற்றியெல்லாம் பாடம் எடுக்க மோடிக்கு வெட்கமாக இல்லையா? என்றும், வேளாண்மை சட்டத்திற்கு எதிரான போராட்டத்தில் தடியடி, கண்ணீர்ப் புகைக் குண்டு வீச்சு, என எத்தனை அக்கிரமங்களைச் செய்ய முடியுமோ அத்தனையும் செய்த மோடிதான் திருச்சியில் கபட வேடம் போடுகிறார் என்றும், விவசாயிகளின் எதிரி மோடியையும் அவருக்குத் துணை போகும் துரோகி எடப்பாடி பழனிசாமியையும் தமிழ்நாட்டு விவசாயக் குடும்பங்கள் என்றும் மன்னிக்காது என்றும், இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ். ரகுபதி செய்தியாளர் சந்திப்பில் காட்டமாகத் தெரிவித்தார்.**

இது குறித்து இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ். ரகுபதி அவர்கள் நேற்று (12.03.2026) சென்னை அண்ணா அறிவாலயத்தில் பத்திரிகையாளர்களைச் சந்தித்து குறித்த செய்திக் குறிப்பு வருமாறு:

தேர்தல் வந்துவிட்டால் பிரதமர் மோடிக்குத் தமிழ்நாடு மீது பாசம் டன் கணக்கில் கொட்டும். திருச்சி கூட்டத்தில் ஆத்தோ ஆத்து என்று உரையை ஆற்றியிருக்கிறார். வறண்ட தானியமான கேப்பையில் நெய் வடிவது சாத்தியமில்லை. கேட்கிறவன் கேனையனா இருந்தால் கேப்பையில் நெய் வடியுதுனு சொல்ற மாதிரி பொய்ப் பிரசாரங்களை முன்னெடுப்பதில் பிரதமர் மோடியை மிஞ்சும் ஆள் இந்த உலகத்திலேயே இல்லை. விவசாயம், விவசாயிகளின் வருமானம், விவசாயம் மற்றும் கிராமப்புற மேம்பாட்டிற்கான திட்டங்கள் பற்றியெல்லாம் பேசுவதற்குப் பிரதமர் மோடிக்கு அருகதை இருக்கிறதா?

**முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆட்சியில் வேளாண்மைக்கு தனி பட்ஜெட்!**

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகுதான் முந்தைய அதிமுக ஆட்சியில் நசிந்து கிடந்த விவசாயத்தை மீட்டெடுக்க வேளாண்மைக்கென தனி பட்ஜெட் தாக்கல் செய்யப்படும் என அறிவித்தார். அதன்படி கடந்த ஐந்தாண்டுகளாக வேளாண் துறைக்கென ரூபாய் 1 இலட்சத்து 94 ஆயிரத்து 76 கோடி நிதி, உழவர்களின் நலனுக்காகவும், உழவுத் தொழிலை மேம்படுத்தவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

உழவர்களின் கோரிக்கையை ஏற்று நெல் கொள்முதல் ஆதார விலை குவிண்டாலுக்கு ரூ.2500ஆக உயர்த்தப்படும் என வாக்குறுதி கொடுத்து, அதன் படி விலையை உயர்த்தி வழங்கியவர் முதலமைச்சர் அவர்கள். ஆனால், பிரதமர் மோடி என்ன செய்தார்? விவசாயத்தையே அழிக்கும் மூன்று வேளாண் சட்டங்களைக் கொண்டுவந்து, விவசாயிகளின் வயிற்றில் அடிக்கப் பார்த்தார். மூன்று வேளாண் சட்டங்களை எதிர்த்தும், விவசாய விளைபொருட்களுக்குக் குறைந்தபட்ச ஆதார விலையை உறுதி செய்ய வேண்டும் எனப் போராடிய விவசாயிகள் மீது கண்மூடித்தனமான வன்முறையைக் கட்டவிழ்த்துவிட்டார்.

“விவசாயிகளின் வருவாய் இரட்டிப்பாக்கப்படும்” என்று வாக்குறுதி கொடுத்துவிட்டு, மோசமான 3 விவசாயச் சட்டங்களைக் கொண்டு வந்து, தனக்கு நெருக்கமான தொழிலதிபர்களுக்குச் சாதகமாகச் செயல்பட்டார் பிரதமர் மோடி. சந்தைகளை நீக்கிவிட்டு விவசாய வணிகத்தை கார்ப்பரேட் மூலம் செய்ய மோடி கொண்டு வந்த விவசாயச் சட்டங்கள் வழிவகுத்தன. அந்தக் கருப்புச் சட்டங்களை எதிர்த்துப் போராடிய விவசாயிகளை இரும்புக் கரம் கொண்டு ஒடுக்கினார்.

இந்திய வரலாற்றிலேயே நடந்த மிக நீண்ட மக்கள் போராட்டம் என்று வருணிக்கப்படும் போராட்டத்தைத் தலைநகர் டெல்லியின் எல்லைகளில் ஓராண்டுக்கும் மேலாக முகாமிட்டு விவசாயிகள் நடத்தினார்கள். மழை, வெப்பம், கடும் பனி, போலீஸ் கட்டுப்பாடுகள், தடியடி, கண்ணீர்ப் புகைக் குண்டு வீச்சு என எத்தனை அக்கிரமங்களைச் செய்ய முடியுமோ அத்தனையும் செய்த மோடிதான் திருச்சியில் கபட வேடம் போடுகிறார்.

**மோடி ஆட்சியில்தான் ஒன்றரை லட்சம் விவசாயிகள் தற்கொலை!**

வேளாண்மை சட்டத்திற்கு எதிரான போராட்டத்தில் கடுங்குளிர், தற்கொலை, விபத்தால் 700 விவசாயிகளை கொன்றுவிட்டு, விவசாயம் பற்றியெல்லாம் பாடம் எடுக்க மோடிக்கு வெட்கமாக இல்லை? உத்தரபிரதேசம் லக்கிம்பூரில் ஊர்வலம் சென்ற விவசாயிகள் மீது பா.ஜ.கவின் அதிகார வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் காரை ஏற்றி 4 அப்பாவிகளைப் படுகொலை செய்தவர்கள் காருண்ணியம் பேசுகிறார்கள்!

பிரதமர் மோடி இப்படியென்றால் அவருடைய பரம அடிமையான பழனிசாமியும் மூன்று வேளாண் சட்டங்களை ஆதரித்ததோடு சேலம் சென்னை பசுமை வழிச்சாலையை எதிர்த்துப் போராடிய விவசாயிகள் மீது அடக்குமுறையை ஏவிவிட்டார்.

பிரதமர் நரேந்திர மோடியின் 11 ஆண்டுக்காலத்தில் மட்டும் சுமார் ஒன்றரை லட்சம் விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டிருக்கிறார்கள். அந்தத் தரவுகளை மறைத்து மோசடி ஆட்சியை நடத்தி வருகிறார்கள். அதே பாணியைத்தான் எடப்பாடி பழனிசாமியும் தன்னுடைய ஆட்சியில் செய்தார். சொந்த காரணங்களுக்காகத்தான் விவசாயிகள் இறந்தனர் என்று அன்றைக்கு பொய்க் கணக்கு சொன்னார்.

மதுரையில் விவசாயத்தை அழிக்கும் டங்ஸ்டன் சுரங்கம் அமைக்கும் முயற்சிக்குக் காரணமான கனிமவளச் சட்டத் திருத்தத்தை ஒன்றிய அரசு மாநிலங்களவையில் கொண்டு வந்த போது ஆதரவு கொடுத்து, மதுரை விவசாயிகளுக்குத் துரோகம் செய்தவர் பழனிச்சாமி. ஆனால், டங்ஸ்டன் சுரங்கம் அமைக்கும் பணியைத் தடுத்து நிறுத்தி விவசாயத்தைக் காப்பாற்றியவர் நம்முடைய முதலமைச்சர் அவர்கள்.

**நீலிக்கண்ணீர் வடிக்கும் மோடி!**

இன்று திருச்சியில் நின்று விவசாயிகளுக்கு நீலிக் கண்ணீர் வடிக்கும் பிரதமர் மோடி தான், சில வாரங்களுக்கு முன்பு அமெரிக்க விவசாயப் பொருட்களை இந்தியச் சந்தைகளில் விற்க ஒப்புதல் அளித்து, இந்திய விவசாயத்தையே சவக் குழியில் தள்ளியுள்ளார். அமெரிக்க விவசாயப் பொருட்களுக்கான வரியை 18 சதவீதமாகக் குறைத்து, இந்திய விவசாயத்தைச் சவக்குழியில் தள்ளியுள்ளார் பிரதமர் மோடி. 45.5 லட்சம் கோடி ரூபாய் மதிப்புள்ள அமெரிக்க யானையை, உள்ளூர் கரும்புத் தோட்டத்திற்குள் நுழையவிட்டுப் பொருளாதாரத்தைச் சிதைக்கப் பார்க்கிறார். கேஸ் மற்றும் பெட்ரோல் தட்டுப்பாட்டிற்கு மத்தியிலும் அவர் அமெரிக்கா மற்றும் இஸ்ரேலுக்குத்தான் வெண்சாமரம் வீசிக்கொண்டிருக்கிறார். இந்திய மக்கள் கேஸ் சிலிண்டருக்கும் பெட்ரோலுக்கும் தத்தளித்துக் கொண்டிருக்கின்றனர்.

விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்குவேன் என்று 2014ல் கொடுத்த வாக்குறுதியைப் பிரதமர் நரேந்திர மோடி நிறைவேற்றி விட்டாரா? ‘விவசாயிகளின் வருமானத்தை உயர்த்துவேன்’ எனக் கூறிவிட்டு ஆட்சிக்கு வந்த பின் விவசாயிகள் வயிற்றில் அடித்து வருபவர்தானே பிரதமர் மோடி. இவையெல்லாம் தமிழ்நாட்டு மக்களுக்குத் தெரியாது எனக் கதையளக்க வந்துவிட்டார்!

திராவிட மாடல் ஆட்சியில் விவசாயத்திற்கு எனத் தனி பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டு, 5 ஆண்டுகளில் ரூ. 1,94,076 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. நெல் கொள்முதல் விலையைக் குவிண்டாலுக்கு ரூ. 2500 ஆக உயர்த்தியுள்ளோம். ஆனால் பிரதமர் மோடி 3 வேளாண் சட்டங்களைக் கொண்டுவந்து விவசாயிகளின் வயிற்றில் அடிக்கப்பார்த்தார். திராவிடமாடல் ஆட்சியில் 2 லட்சம் இலவச மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. ஆனால், விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் கொடுக்கக் கூடாது என உதய் மின் திட்டம் வழியாகத் தடை போட்டவரும் இதே பிரதமர் மோடிதான் என்பதை விவசாயிகள் மறக்கமாட்டார்கள்.

**உரிய காலத்தில் மேட்டூர் அணை திறப்பு!**

ஐந்தாண்டு திமுக ஆட்சியில் உரிய காலத்தில் மேட்டூர் அணை திறக்கப்பட்டு, பூமி செழித்தது. உற்பத்தி அதிகரித்தது. கடந்த காலங்களை விட 3 லட்சம் ஏக்கர் கூடுதலாக நெல் சாகுபடி பரப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. முந்தைய அதிமுக ஆட்சியில் ஆண்டுக்கு 22.7 லட்சம் டன் நெல் மட்டுமே கொள்முதல் செய்யப்பட்ட நிலையில், தற்போது திராவிட மாடல் ஆட்சியில் ஆண்டுக்கு 42.6 லட்சம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முழுக்க தார்ப்பாய் வசதியுடன் 103 திறந்த வெளி நெல் சேமிப்புக் கிடங்குகள் உள்ளன. மேலும் ரூ.400 கோடி மதிப்பீட்டில் 300 சேமிப்புக் கிடங்குகள் அமைக்கப்பட்டு வருகின்றன. இதுதவிர 100க்கும் மேற்பட்ட நவீனச் சேமிப்புக் கிடங்குகள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. எடப்பாடியின் ஆட்சிக் காலத்தில் 1.36 சதவீதமாக இருந்த வேளாண் வளர்ச்சி, திராவிட மாடல் ஆட்சியில் 5.66 சதவீதத்தைத் தாண்டி இருக்கிறது.

இப்படி விவசாயிகளின் நண்பனாக இருந்து விவசாயத்தைப் பாதுகாத்து வருகிறார் முதலமைச்சர் அவர்கள். ஆனால் மழைக்காலத்தில் கூட நெல் கொள்முதல் ஈரப்பத அளவை குறைக்காமலும், மழை வெள்ளத்தால் விவசாயிகள் பாதிக்கப்பட்ட போதும் முறையான நிவாரண நிதி கூட வழங்காமலும் விவசாயிகளின் எதிரியாக இருப்பவர் பிரதமர் மோடி.

**விவசாயிகளின் எதிரி மோடி**

விவசாயிகளின் எதிரி மோடியையும் அவருக்குத் துணை போகும் துரோகி எடப்பாடி பழனிசாமியையும் தமிழ்நாட்டு விவசாயக் குடும்பங்கள் என்றும் மன்னிக்காது. பிரதமர் மோடியின் பொய் தமிழ்நாட்டில் செல்லுபடியாகாது. டெல்லி டப்பா எஞ்சினால் ஒருநாளும் தமிழ்நாட்டில் நுழைய முடியாது. இங்கே திராவிட மாடல் ஆட்சியின் சூப்பர் ஃபாஸ்ட் இஞ்சின் இருக்கிறது. இந்த ஒற்றை இஞ்சின் மூலம் தமிழ்நாட்டை வளமாக்கியிருக்கிறோம். எங்களிடம் இரட்டை இஞ்சின் கிடைக்கும் போது இந்தியாவையே வளமாக்கி உலக நாடுகளுக்கு சவால் விடும் வல்லமையை திராவிட மாடல் அரசு எதிர்காலத்தில் செய்யும்.

பின்னர் பத்திரிகையாளர் கேள்விக்கு பதிலளித்த அவர்:

பாஜக ஆளும் மாநிலங்களில் மக்கள் எஃப்.ஐ.ஆர் பதிவு செய்யவே பயப்படுகிறார்கள். ஆனால் தமிழ்நாட்டில் புகார்கள் பதிவு செய்யப்படுவதே பெண்களுக்கான விழிப்புணர்வு மற்றும் பாதுகாப்பிற்குச் சான்று. தமிழ்நாட்டில் 42% பெண்கள் வேலைக்குச் செல்வதும், 52% பெண்கள் உயர் கல்வி கற்பதுமே இங்கு நிலவும் பாதுகாப்பிற்குச் சான்று. கடந்த காலப் பொள்ளாச்சி சம்பவத்தில் புகார்கள் கூடப் பதியப்படாத நிலையை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.

அதிமுக ஆட்சியில் நிலவிய ”கரப்ஷன், கமிஷன், கலெக்ஷன்” முறையை நாங்கள் ஒழித்துள்ளோம். கஞ்சா தமிழ்நாட்டில் விளையவில்லை, அது வெளி மாநிலங்களில் இருந்தே கொண்டு வரப்படுகிறது. அதைத் தடுக்க வேண்டியது ஒன்றிய அரசின் போதைப் பொருள் தடுப்புப் பிரிவின் கடமை. இருந்தாலும் நாங்கள் கடுமையான நடவடிக்கைகள் எடுத்து தடுத்து வருகிறோம். குற்றவாளிகள் யாராக இருந்தாலும் எங்கள் முதலமைச்சர் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கத் தயங்கமாட்டார்.

இவ்வாறு அமைச்சர் எஸ். ரகுபதி பேட்டியளித்தார்.

---

**சட்டப்பேரவை பொதுத்தேர்தல் – 2026**

# ஓ.பன்னீர்செல்வம் - சட்டமன்றத் தொகுதி வாரியாக தேர்தல் பிரச்சாரச் சுற்றுப்பயணம்!



| தேதி | நேரம் | தொகுதி | ஒன்றிய/நகர/பேரூர் | இடம் |
|---|---|---|---|---|
| மார்ச் 13 | காலை 9.00 மணி | தென்காசி | ஆலங்குளம், கடையநல்லூர், தென்காசி ஆகிய ஒன்றியங்கள் இலஞ்சி, குற்றாலம், மேலகரம், சுந்தரபாண்டியபுரம் ஆகிய பேரூர்கள் | சாரதாம்பாள் திருமண மண்டபம், இலஞ்சி. |
| மார்ச் 13 | மாலை 4.00 மணி | கடையநல்லூர் | கடையநல்லூர் ஒன்றியம் மற்றும் நகரம் – அச்சன்புதூர், பண்பொழி பேரூர் | அச்சன்புதூர் |
| மார்ச் 13 | இரவு 7.00 மணி | சங்கரன்கோவில் (தனி) | குருவிக்குளம், சங்கரன்கோவில், மேலநீலிதநல்லூர் ஒன்றியங்கள் | சங்கரன்கோவில் |
| மார்ச் 14 | காலை 9.00 மணி | வாசுதேவநல்லூர் (தனி) | சங்கரன்கோவில், வாசுதேவநல்லூர் ஆகிய ஒன்றியங்கள் – சிவகிரி பேரூர் | வாசுதேவநல்லூர் |
| மார்ச் 14 | மாலை 4.00 மணி | முதுகுளத்தூர் | கடலாடி, கமுதி, முதுகுளத்தூர் ஒன்றியங்கள் | கடலாடி |
| மார்ச் 14 | மாலை 6.00 மணி | பரமக்குடி (தனி) | நயினார்கோவில் ஒன்றியம், பரமக்குடி தெற்கு நகரம் | நயினார்கோவில் |
| மார்ச் 14 | இரவு 8.00 மணி | திருவாடானை | ஆர்.எஸ்.மங்கலம், திருவாடானை ஒன்றியங்கள் | திருவாடானை |

இவ்வாறு தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன், தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ. ராஜா எம்.எல்.ஏ., இராமநாதபுரம் மாவட்டச் செயலாளர் காதர்பாட்சா (எ) முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. ஆகியோர் அறிவித்துள்ளனர்.

---

**அனைத்துக் குற்றங்களையும் தீர்த்து வைக்கத்தான் நாங்கள் உள்ளோம்!**

# குற்றவாளிகளை உடனே கண்டுபிடித்து கைது செய்திருக்கிறோம்!

## காவல்துறை நடவடிக்கை குறித்து உயர் அதிகாரிகள் விளக்கம்!

**சென்னை, மார்ச் 14-**

**சென்னை, தலைமைச் செயலகம், பிரதான கட்டடம், இரண்டாம் தளத்தில் உள்ள கூட்ட அரங்கில், நேற்று முன்தினம் (12.3.2026) உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ் குமார், காவல் துறை தலைமை இயக்குநர் ஜி.வெங்கடராமன், பெருநகர சென்னை காவல் ஆணையர் ஆ.அருண் ஆகியோர் பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு:-**

உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ் குமார் கூறியதாவது:–

இன்றைக்கு உங்களிடம் தமிழ்நாட்டில் இருக்கின்ற நம்முடைய Law and order situation, Crime situation பற்றி தமிழ்நாடு அரசு என்னென்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? குறிப்பாக, கடந்த 5 வருடங்களில், தமிழ்நாடு அரசு என்னென்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? இன்றைய தேதியில், இந்த Crime Situation எப்படி இருக்கின்றது? அது சம்பந்தமாக உங்களுக்கு ஒரு விளக்கம் தருவதற்கு உங்களை அழைத்தி ருக்கிறோம்.

இப்போது தமிழ்நாட்டின் கடந்த ஐந்து வருடங்களின் situation கணக்கை எடுத்துப் பார்க்கும் போது, அனைத்து மேஜர் கிரைம் ஹெட்ஸில் number of crimes reported ஒரு ஒரு substantial decline இருக்கின்றது. குறிப்பாக பார்க்கும் போது, நம்முடைய நம்பர் ஆஃப் மர்டர் கேசஸ் ரிப்போர்ட்டட் எடுக்கும் போது, அது போல, மர்டர் ஃபார் கெயின் எடுக்கும் போது, கைட்டி கேசஸ் எடுக்கும் போது, ராபரி இந்த மாதிரி கேசஸ் எடுக்கும் போது, இன்குளூடிங் நம்பர் ஆஃப் கேசஸ் இன் த லைட்டிங், நம்பர் ஆஃப் ரேப் கேசஸ். இப்போது கடந்த ஐந்து வருடங்களின் figuresயை எடுத்து பார்த்தீர்கள் என்றால், In all these crimes எல்லாவற்றிலும் the number of cases which are being reported, there is a substantial declain. Specificஆக சொல்ல வேண்டும் என்று சொன்னால், I will just take up number of murder cases எடுத்துக் கொண்டால், தமிழ்நாட்டில், 2021ல் 1597 கேசஸ் were reported for murder. இதே நம்பர் வருடந்தோறும் அப்படியே steady declineஐ காட்டிக் கொண்டிருக்கும். 2024ல், 1490 வழக்குகள், 2025ல் 1461 வழக்குகள், பாலியல் வன்கொடுமை வழக்கில், அதே வகையான steady decline. 2021 is started with 422 வழக்குகள் பதிவாகியிருக்கின்றன. இது அப்படியே steady declineல் இன்றைக்கு 2025ல், 401 வழக்குகள் பதிவாகி இருக்கின்றன.

இப்படி பார்க்கும்போது, almost all the major crime hits, the number of cases which are being reported has come down. அதே போல, law and order situation control செய்வதற்கு all the major events, temple festivals, other kind of aspects also, the department, police department and the government, இதை நன்றாக கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கிறோம். இந்த தகவல்களை விளக்கமாக வழங்கு வதற்காக தான் நாங்கள் உங்களை அழைத்தி ருக்கிறோம்.

இந்த மீடியாவில், கடந்த சில மாதங்களில், ஒரு சில இடங்களில் இருந்து உண்மைக்கு மாறாக கொண்டு வருகிறார்கள். அதனால், இதை கொஞ்சம் தெளிவுப்படுத்திக் கொள்ளலாம். இதை பத்திரிகை மற்றும் ஊடகவியலாளர்களிடம் தெரிவித்துக் கொள்கிறோம். We can give the true picture with facts and figures. அந்த நோக்கத்துடன் தான் இன்றைக்கு வந்திருக்கிறோம். மேலும், this is the broader picture.

2026ன் கணக்கெடுத்துப் பார்க்கும் போது கூட, same kind of trend we can say, If you want, I can give the facts and figures of 2026 figures also. But a similar kind of a trend is seen in 2026 figures also. So this is the first message that we want to give that, actually, the number of crime for the last five years is going down. If you look at the hard statistics, எடுத்து பார்த்தீர்கள் என்றால், actual number is coming down.

காவல் துறை தலைமை இயக்குநர் ஜி. வெங்கடராமன் கூறியதாவது:–

கடந்த ஐந்து ஆண்டுகளில் முக்கியமான வழக்குகள், அதாவது மர்டர், Murder, Murder for Robbery இவைகள் எல்லாம் பார்க்கும்போது, marginalஆக குறைந்திருக்கிறது. அதே நேரத்தில், காவல்துறையை பொறுத்தவரைக்கும், ஒரு சிறிய குற்றமாக இருந்தாலும், பெரிய குற்றமாக இருந்தாலும், குற்றத்தை சீரியஸாக கண்டுபிடிக்க வேண்டும் என்கின்ற ஒரு நோக்கத்தில், நாம் மக்களை நிறைய குற்றங்கள் நடந்ததை ரிப்போர்ட் செய்யுங்கள் என்று சொல்வோம். இப்போது போக்சோ வழக்கு என்பது சமீபத்தில் வந்த சட்டம். 2012, 2013க்கு முன்னால் வந்த சட்டம் தான். முதலில், அதைப்பற்றிய விழிப்புணர்வு நிறைய பேருக்கு இல்லாமல் இருந்தது.

தற்போது அரசாங்கத்தின் முழு அணுகுமுறையினால், காவல்துறை மட்டுமல்லாமல், பள்ளிக்கல்வித் துறை, சமூக நலத்துறை, ஆதி திராவிடர் நலத்துறை ஆகிய எல்லோரும் சேர்ந்து, போக்சோ பற்றிய விழிப்புணர்வை அதிகரித்து வருகிறோம். இப்போது தைரியமாக பள்ளிக்கூடங்களில், ஒரு வாத்தியார் குழந்தையை தவறாக தொட்டார் என்றால், வந்து சொல்கிறார்கள். இது 10 வருடத்திற்கு முன்பு நடந்தது. அதனால், சில குற்றங்கள் தலைப்பில், அதாவது போக்சோ வழக்கிலேயே ஒரு சில குற்றங்கள்.

அதே போன்று எஸ்சி, எஸ்டியிலும் நாம் நிறைய விழிப்புணர்வை கொடுத்து, மேலும், ஜாதி பேர் சொன்னாலும் உடனடியாக அதற்கே ஒரு FIR போடுகிறோம். அடிக்க வேண்டும் என்ற கட்டாயம் கிடையாது. காயம் இருக்க வேண்டும் என்பது கட்டாயம் கிடையாது. அதனால் இது போன்று social legislationல் especially, Pocso and SC&ST Actல் நிறைய விழிப்புணர்வு கொடுத்து, Government and accountability, காவல்துறை மட்டும் இல்லை, மற்ற துறைகளும் சேர்ந்து மக்களுக்கு அந்த விழிப்புணர்வை ஏற்படுத்தி, அதனால் நிறைய புகார்கள் வருகிறது.

அந்த வருகின்ற புகார்களை யும் நாங்கள் பதிவு செய்ய சொல்கிறோம். முன்பெல்லாம் petitionஆக வைத்திருப்பதோ அல்லது விசாரிக்கா மல் இருக்கக்கூடாது என்று ஒரு மைண்ட் செட் இல்லாமல் எதுவாக இருந்தாலும், அதை விசாரிக்க வேண்டும். Statisticsயை பற்றி கவலைப்படக்கூடாது. வழக்கை பதிவு செய்து விசாரிக்க வேண்டும் என்ற ஒரு நல்ல நோக்கத்தில்தான் போக்ஸோ எஸ்சி, எஸ்டியிலும் நிறைய வழக்குகள் பதிவாகின்றது. நாம் குற்றங்கள் நிறைய இருக்கின்றது என்று சொல்லி சமுதாயத்தையே நாம் ஏதோ ஒரு நெகட்டிவாக பார்க்க ஆரம்பித்துவிட்டோம் என்றால், அப்புறம் மக்களுக்கு இதை சொல்வதற்கு கொஞ்சம் தயக்கம் வந்துவிடும். ஏதோ நாம் சமூகத்தில் மிகவும் கீழே சென்றுவிட்டோம் என்று கிடையாது.

போக்ஸோ குற்றங்கள் நடந்தால் வந்து சொல்லவேண்டும். நாங்கள் அனைத்துக் குற்றங்களையும் தீர்த்து வைப்பதற்கு தான் இருக்கிறோம். இப்போது சமீப காலமாக வந்த குற்றங்களை கூட ஓரிரு வழக்கு தான் under investigationல் இருக்கிறது. மீதமுள்ள எல்லாவற்றிலும், நாங்கள் குற்றவாளியை கண்டுபிடித்து விட்டோம். கைது செய்துவிட்டோம்.

அதனால், தமிழக காவல்துறையை பொறுத்தவரையில், மக்களுக்கு எந்த குற்றம் நடந்தாலும் அது சீரியஸ் குற்றம் தான். அது சிறிய குற்றம், பெரிய குற்றம் இல்லை. அதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்து வருகிறோம், எடுப்போம். அதில் எந்த சந்தேகமும் இல்லை. Statisticsல் நாம் ஒரு அளவுக்கு மீறி முக்கியத்து வம் கொடுக்க கூடாது. ஆனால், அதே நேரத்தில், மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தி, நிறைய குற்றங்கள் வந்தால் தகவல் வழங்குங்கள் என்று சொல்லும் போது, நாம் அதில் மிகவும் முக்கியத்துவம் கொடுத்து அதை குறைப்பதற்கு முயற்சி செய்யகூடாது.

இவ்வாறு காவல்துறை உயர் அதிகாரிகள் விளக்கம் அளித்துள்ளனர்.

---

**சேலம் சிறையில் உயிர்நீத்த**

# 22 தியாகிகளின் நினைவுத் தூண் மண்டபப் பணிகள்!

## அமைச்சர் இரா.இராஜேந்திரன் தொடங்கி வைத்தார்!

சேலம், மார்ச். 13-

சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் ரூ.3 கோடி ரூபாய் மதிப்பில் சேலம் சிறையில் உயிர்நீத்த 22 தியாகிகளின் நினைவுத்தூண் மண்டபப் பணிகளை தொடங்கி வைத்து, ரூ.1 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள பொதுப்பணித் துறை தர கட்டுப்பாட்டு ஆய்வகம் மற்றும் ரூ.17 இலட்சம் மதிப்பீட்டில் புதிய நியாய விலைக் கடையினை திறந்து வைத்தார்.

சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் ரூ.3 கோடி ரூபாய் மதிப்பில் சேலம் சிறையில் உயிர்நீத்த 22 தியாகிகளின் நினைவுத்தூண் மண்டபப் பணிகளை தொடங்கி வைத்து, ரூ.1 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள பொதுப்பணித் துறை தர கட்டுப்பாட்டு ஆய்வகம் மற்றும் ரூ.17 இலட்சம் மதிப்பீட்டில் சேலம் மாநகராட்சி, செவ்வாய்ப்பேட்டை லாரி மார்க்கெட், லாங்லி ரோடு புதிய நியாய விலைக் கடையினை திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சிக்குப் பின்னர் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்ததாவது,

முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களின் முன்னேற்றத்திற்காகவும், நலனுக்காகவும் பல்வேறு திட்டங்களை அறிவித்துச் சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக, முதலமைச்சர் அவர்கள் மகளிருக்கு முக்கியத்துவம் அளித்து பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார்கள். அதேபோன்று, பொதுமக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளுக்கு முக்கியத்துவம் அளித்து பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகளை சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறார்.


முதலமைச்சர் அவர்கள், சேலம் சிறையில் 22 கம்யூனிஸ்டுகள் சுட்டுக் கொல்லப்பட்டதன் நினைவாக சேலத்தில் சிறைத் தியாகிகள் மணி மண்டபம் அமைக்கப்படும் என்று அறிவித்தார். அந்த அறிவிப்பிற்கிணங்க, சேலம், அஸ்தம்பட்டியில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் ரூ.3 கோடி ரூபாய் மதிப்பில் சேலம் சிறையில் உயிர் நீத்த 22 தியாகிகளின் நினைவுத்தூண் மண்டபப் பணிகளை முதலமைச்சர் அவர்கள் 26.02.2026 அன்று அடிக்கல் நாட்டி வைத்ததைத் தொடர்ந்து நேற்றையதினம் அதற்கான பணிகள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

மேலும், பொதுப் பணித்துறை ஆய்வு மாளிகை வளாகத்தில் ரூ.1 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள பொதுப்பணித்துறை தர கட்டுப்பாட்டு ஆய்வகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இக்கட்டிடத்தில் ஆய்வகம், கணினி, அலுவலக அறை, துரிதப்படுத்தப் பட்ட தொட்டி அறை, இயந்திர சோதனை அறை மற்றும் ஆய்வக அறிக்கை தயாரிப்பு அறை உள்ளிட்டவைகள் ஏற்படுத்தப் பட்டுள்ளது.

அதனைத்தொடர்ந்து சேலம் மாநகராட்சி, செவ்வாய்ப்பேட்டை லாரி மார்க்கெட் லாங்லி ரோடு புதிய நியாய விலைக் கடையினை ரூ.17 இலட்சம் மதிப்பீட்டில் பொது மக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப் பட்டுள்ளது. முதலமைச்சர் அவர்கள் எப்பொழுதும் மாணவர்கள், பொதுமக்கள், விவசாயிகள், நெசவாளர்கள் ஆகியோரின் நலனை கருத்தில் கொண்டு செயல்பட்டு வருகின்றார்கள். முதலமைச்சரின் இத்தகைய திட்டங்களை பொதுமக்கள் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமாய் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இவ்வாறு சுற்றுலாத் துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சிகளின் போது, மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி மாநகராட்சி மேயர் ஆ.இராமச்சந்திரன், மாநகராட்சி துணை மேயர் திருமதி மா.சாரதா தேவி, பொதுப் பணித்துறை கண்காணிப்பு பொறியாளர் பாலரவிக்குமார், செயற்பொறியாளர் தியாகராஜன், கூட்டுறவு சங்கங்களின் இணை பதிவாளர் ராஜ்குமார் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் மற்றும் கம்யூனிஸ்ட் கட்சிகளின் பிரதிநிதிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.





சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் பொதுப்பணித்துறையின் சார்பில் சேலம் மாவட்டம், பொதுப்பணித்துறை ஆய்வு மாளிகை வளாகத்தில் ரூ.1 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள பொதுப்பணித்துறை தர கட்டுப்பாட்டு ஆய்வகத்தினை 12.03.2026 அன்று திறந்து வைத்தார்கள். உடன், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, மாநகராட்சி மேயர் ஆ.ராமச்சந்திரன், மாநகராட்சி துணை மேயர் திருமதி மா.சாரதாதேவி உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.